நெருங்கிய உறவு கொண்டிருந்தார். “நோவா அப்படியே செய்தான்” “தேவன் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்.” ஆதி.6.22 இந்த வசனம் இன்றைய சூழலில் நாம் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வாழ வேண்டும் என வலியுறுத்துகிறது.

முதுமையிலும் இளமையாக இருக்க ஆரோக்கியம் மிகவும் அவசியம். நோய் வந்த பிறகு சிகிச்சை தேடுவதற்கு பதில், முன்பே பாதுகாப்பதே சிறந்த ஆரோக்கியம். சரியான அறிவு இருந்தால் ஆரோக்கியமாக வாழ்வது எளிது. அதற்காக நாம் கைக்கொள்ள வேண்டிய சில முக்கிய விஷயங்கள் :

- மருத்துவரின் ஆலோசனையின்படி முழு உடல் ஆரோக்கிய பரிசோதனை செய்து கொள்ளுதல்
- தினமும் உடற்பயிற்சி/நடைப்பயிற்சி/மூச்சுப்பயிற்சி செய்தல்
- நாம் பல் துலக்காமல் வெளியில் செல்ல மாட்டோம் ; அதுபோல, உடற்பயிற்சி செய்யாமல் இருக்கக் கூடாது.
- சீரான உணவு முறையைப் பின்பற்றுதல் ; குறிப்பாக, உப்பைக் குறைத்துக் கொள்ளுதல்
- மனநலம் பேணுதல் தினசரி வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும் மகிழ்ச்சியாக வாழவும் உதவும்
- தடுப்பு மருத்துவ விழிப்புணர்வு மிகவும் அவசியமானது.
- மருத்துவரின் ஆலோசனையின்படி அக்கி, நிமோனியா, போன்ற நோய்களுக்கு தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.

<u>சிறிய நல்ல பழக்கங்கள் = பெரிய ஆரோக்கிய பலன் + பணச் சேமிப்பு</u>

கர்த்தருக்குள் மகிழ்ச்சியாக இருப்பதே நம்முடைய பெலன். நாம் இக்கட்டான சூழ்நிலைகளிலும் எதிர்ப்புகளின் மத்தியிலும் சோர்வடையாமல், சந்தோஷமாக வாழ்வோமாக. கர்த்தர் தாமே நம்மையும் பிள்ளைகளையும் நம் பிள்ளைகளின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக.

**ஆயர்**
**98401 98476**

தொடர்புக்கு:
நவராஜ் ரவீந்திரன்
மூத்தோர் ஐக்கியம் – கன்வீனர்
**90808 18761**

சரோஜா அச்சகம், படப்பை 9382853469

தென்னிந்தியத் திருச்சபை – சென்னைப் பேராயம்-படப்பை குருசேகரம்

**CSI கிறிஸ்து நாதர் ஆலயம், டேவிட் நகர், படப்பை – 601 301.**

# விழுதுகள்

**ஜுன் - 2026**

(உறுப்பினர் பயன்பாட்டிற்கு மட்டும்)

**ஆண்டவரால் இது நிகழ்ந்துள்ளது! நம் கண்களுக்கு இது வியப்பாயிற்று!**
**திருப்பாடல்கள் 118:23**

## CSI தூய பேதுரு ஆலயம், சாலமங்கலம்
## இறை ஒப்படைப்பு மற்றும் திடப்படுத்தல் வழிபாடு





**நாள் : 11.06.2026 வியாழக்கிழமை**
**நேரம் : மாலை 5.00 மணி**

தலைமை :

**பேருள்பணி. A. பால் பிரான்சிஸ் ரவிச்சந்திரன்**

(பேராயர் சென்னைப் போராயம்)

## ஆயர் மடல்



*"கடவுளின் சொல்லொண்ணாக் கொடைக்காக*

*அவருக்கு நன்றி உரித்தாகுக."* 2 கொரிந்தியர் 9:13

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபைக் குடும்பத்தாரே !

கர்த்தரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரிவ் உங்கள் அனைவரையும் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். கர்த்தருடைய பெரிதான கிருபையாலும் நம் பேராயர் பேரருள்பணி **A.பால்பிரான்சிஸ் ரவிச்சந்திரன்** ஐயா அவர்களின் வழிநடத்துதலினாலும் நமது படப்பை குருசேகரத்தில் ஆறாவது ஆண்டு குடும்பமாக திருப்பணியாற்றிடும் வாய்ப்பினை பெற்றிருப்பதற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். படப்பை குருசேகர இறைமக்களாகிய உங்கள் அனைவரின் ஜெபத்தையும் ஆயர் திருப்பணியில் உங்கள் ஒத்துழைப்பையும் அன்புடன் எதிர்பார்க்கிறேன்.

இவ்வருடம் கடந்த ஐந்து மாதங்கள் பாதுகாத்து பராமரித்து வழி நடத்திய கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். ஜுன் மாதம் நமது திருச்சபை பிள்ளைகளுக்கு புதிய கல்வி ஆண்டின் தொடக்கம் பள்ளி விடுமுறைகள் முடிந்து தேர்ச்சி பெற்று மேல் வகுப்புக்கு முன்னேறி சென்றுள்ள அனைத்து மாணவ செல்வங்களையும் இறை ஆசியுடன் வாழ்த்துகிறேன்.

நம் பிள்ளைகள் படிப்பிலும், ஒழுக்கத்திலும், திறமையிலும், இறைபக்தியிலும், வளர ஜெபிப்போம். திருத்தூதர் பவுல் கொரிந்திய சபைக்கு எழுதிய 2-ம் அதிகாரம் முடிவில் கடவுளின் சொல்லெண்ணா கொடைக்காக அவருக்கு நன்றி செலுத்துகிறார். இந்தக் கடிதம் எழுதப்பட்ட காலம் எருசலேம் சபை பல்வேறு விதமான துன்புறுத்தல், நிதி நெருக்கடி, பஞ்சம் காரணமாக சோர்ந்து போயிருந்தது. எனவே, கடவுளின் மேலான கிருபையும் கிறிஸ்துவின் மூலம் நாம் பெற்றுக்கொண்ட உன்னதமான மீட்பையும் நினைவூட்டுகிறார். கிறிஸ்துவ விசுவாசத்தில் நாம் கடவுளுக்கு செலுத்தும் நன்றியுணர்வு முக்கியமானது. ஆம் நாமும் கடந்து வந்த பாதைகளில் கடினமான சூழல்களின் மத்தியிலும் வழுவாது நம்மைக் காத்து வழி நடத்தும் ஆண்டவருக்கு நமது நன்றிகளை ஏறெடுத்து கடவுளின் சொல்லெண்ணா கொடையை போற்றுவோம், இறையாசி பெறுவோம் !



**CSI தூய பேதுரு ஆலய இறை ஒப்படைப்பு & திடப்படுத்தல் வழிபாடு :**

நமது கிளைத் திருச்சபையான சாலமங்கலத்தில் கடவுளின் மாபெரும் கிருபையால் நமது திருச்சபையின் மக்கள் அனைவரின் முயற்சியாலும் **CSI** விருகம்பாக்கம் குருசேகர ஆண்கள் ஐக்கிய சங்கம் மற்றும் திருச்சபையின் உதாரத்துவமான பங்களிப்பாலும் புதிய ஆலயம் கட்டப்பெற்று, வரும் 11.06.2026 வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு நமது சென்னைப் பேராயர் **The Rt. Rev. A. பால் பிரான்சிஸ் ரவிச்சந்திரன்**, அருள்பணி. **P. இந்திரா பால்** பேராயரம்மா அவர்கள், மற்றும் பேராய அலுவலர்கள் தலைமையில் இறை ஒப்படைப்பு & திடப்படுத்தல் வழிபாடு நடைபெறவிருக்கிறது. இது கடவுளின் மிகப்பெரிய அருட்கொடை எல்லோரும் இணைந்து ஒருமித்து முயற்சித்தால் கடவுளின் சித்தமிருந்தால் எதையும் விசுவாசத்தோடு சாதிக்க முடியும் என்பதற்கு இப்புதிய ஆலய உருவாக்கம் மிகப்பெரிய சான்றாக உள்ளது. ,இந்நிகழ்வுக்காக சபையார் ஜெபிப்போம்.

## Youth Rally 2026 :

ஜுன் மாதம் 13,14 தேதிகளில் நமது பேராயத்தில் நடைபெறும் வாலிபர் முகாம் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம். நமது திருச்சபை வாலிபர்களுக்காக அவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு, எதிர்காலத்துக்காக தங்கள் வாலிப பருவத்தை கர்த்தருக்காக அர்ப்பணித்து ஆசிபெற ஜெபிப்போம்.

தமிழகத்தில் புதியதாக அமைந்துள்ள அரசுக்காக, முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்கள், அரசு அதிகாரிகளுக்காக ஜெபிப்போம். அவர்கள் மக்களுக்கு நல்லாட்சி வழங்க அவர்கள் பணிக்காக ஜெபிப்போம்.

இம்மாதம் பிறந்தநாள் மற்றும் திருமண நாள் காணும் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக .

அன்புடன்
இறைப்பணியில் உங்கள் ஆயர்
அருள்பணி **Y. தேவகுமார்,**
**98401 98476**



## பெண்கள் பகுதி

# தெபோரா

நியாயாதிபதிகள் 4:5

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் நாமத்தில் திருச்சபைப் பெண்கள் அனைவருக்கும் ஜுன் மாதத்தின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இம் மாதம் நாம் தியானிக்கும் திருமறை பெண்கள் வரிசையில் பழைய ஏற்பாட்டில் நியாயாதிபதிகள் புத்தகத்தில் இடம்பெறும் சிறப்பான பெண் தெபோரா. இவர் இஸ்ரவேலர்களின் பெண் நியாயாதிபதி என்ற பெயருக்கு சொந்தக்காரர் "**தெபோரா**" என்னும் பெயருக்குத் '**தேனீ**' என்று அர்த்தமாம். தேனீயைப் போல சுறு சுறுப்பாக செயல்பட்டாலும் ராணித் தேனீயைப் போல இஸ்ரயேலின் மீட்புக்கு தலைமையேற்றத்தாலும் இவருக்கு இப்பெயர் பொருத்தமே. நியாயாதிபகள் நூல் 12 தலைவர்களைப் பற்றி கூறுகிறது. இந்தப் பன்னிரெண்டு பேரில் நான்காவதாக வரும் ஒரே பெண் நியாயாதிபதி என்ற பெருமைக்குரியவர். அதே நேரம் தீர்க்கதரிசியாகவும் விளங்கினவர் பழைய ஏற்பாட்டில் நியாயாதிபதியாகவும், தீர்க்கதரிசியாகவும் இருந்த ஒரே பெண் இவரே. (நியாயா. 4:5) சாமுவேல் தீர்க்கதரிசிக்குப் பின் இந்த இரட்டைப் பட்டம் இவருக்கு மட்டுமே திருமறை கொடுக்கிறது. தெபோரா நியாயாதிபதிகள் 4ம் அதிகாரத்தில் கடவுளின் கட்டளைபடி கானானியருக்கு எதிராக பாராக்கு என்பவரை படைத்தலைவராகக் கொண்டு பத்தாயிர்ம் ஆண்களுடன் போரைத் தொடங்க தாபோர் மலைக்கு வர அழைப்பு விடுத்தார். போரில் கடவுள் வெற்றி தருவார் என உறுதியாகக் போரிடுவோருக்கு உந்துதல் தரும் எழுச்சிப் பாடல் பாடுகிறார். (நியாயாதி. 5:7, 5:12) இப்பாடல் ஆண்டவரின் அளப்பறிய ஆற்றலையும் விவரிக்கிறது.

திருமறையில் இறைவாக்கினர்களின் கடவுளின் கருவியாகச் செயல்பட்டு மக்களுக்கு நீதி வழுங்குகின்றதை போல இஸ்ரவேலின் சிறந்த பெண் தீர்க்கதரிசியாகச் செயல்பட்டார். மேலும் இஸ்ரவேலின் தாய் என அழைக்கப்பட்டார் நியா.5:7. எல்லாருக்கும் சமநீதி வழுங்கி தாய்போல் செயல்படுகிறார். பெண்களாக நாமும் நமது குடும்பங்களில் எழும் சிக்கல்களைத் தாயுள்ளத்தோடு திறம்படத் தீர்க்கவும் இவள் பாராக்கோடு இணைந்து கானானியரை வெற்றி கொண்டதைப் போல இயேசுவோடு இணைந்து தீமைகளை வெற்றிக்கொள்ள அழைக்கப்படுகிறோம். இஸ்ரவேலருக்கு நீதி வழங்கும் ஞானத்தை கடவுள் தெபோராவுக்கு அருளியதைப் போல, தூய ஆவியின் வழி இறை ஞானத்தோடு குடும்பத்தில் செயல்பட கடவுளின் கரத்தில் நம்மை அர்ப்பணிப்போம்!

ஜுன் மாதம் தொடங்கி பள்ளிக்கு செல்லும் அனைத்து மாணவ மாணவிகளையம் அன்புடன் வாழ்த்துகிறேன்.

இறைபணியில்,

**திருமதி. ஜாய்சிலின் தேவகுமார்**

ஆயரம்மா / பெண்கள் ஐக்கிய சங்கத் தலைவி



## 2026 – ஜுன் மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் / கிழமை | திருமறைப்பாடம் | இறைசெய்தித் தலைப்பு | நடத்துனர் / செய்தியாளர் |
|---|---|---|---|
| 01-06-2026 திங்கட்கிழமை காலை 6.00 | மாதப்பிறப்பு திருவிருந்து வழிபாடு | | ஆயர் |
| 07-06-2026 ஞாயிறு காலை 8.30 திருவிருந்து வழிபாடு | 2 குறிப்பேடு 20:13-19 திருத்தூதர் பணிகள் 18: 12-2 திருப்பாடல்கள் 87 : 19-37 யோவான் 8: 12-20 | **இயேசு : நமது உன்னத வழிகாட்டி** | ஆயர் |
| 14-06-2026 ஞாயிறு காலை 8.30 | எரேமியா 29:10-14 எபிரெயர் 11 : 17-31 திருப்பாடல்கள் 37 : 23-40 மாற்கு 4 : 35-41 | **உணர்வுகளை விஞ்சும் நம்பிக்கை : வாழ்வு பொருளற்றுப் போகையில் கடவுளைப் பற்றுதல்** | திரு. மில்டன் |
| 21-06-2026 ஞாயிறு காலை 8.30 திருவிருந்து வழிபாடு | யோபு 12:7-12 திருவெளிப்பாடு 22 : 1-6 திருப்பாடல்கள் 19 லூக்கா 12 : 22-34 | **படைப்பு பேசுகிறது : இயற்கையில் கடவுளின் குரலைக் கவனித்தல்** | Rev. கனகராஜ் |
| 28-06-2026 ஞாயிறு காலை 8.30 | செக்கரியா 8 : 18-23 உரோமையர் 10 : 9-17 திருப்பாடல்கள் 66 யோவான் 1 : 39-42 | **சீடத்துவம் : வந்து பாருங்கள் சென்று பகிருங்கள்** | Dr D. ரூப்சிங் |

## ஜுன் – 2026 : தங்கள் பிறந்த நாள் காணுவோர் :

"உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்" ஏசாயா 58:8

1 திரு. பிரபாகரன்
திரு. பால் ரவீந்திரா டேவிட்
திருமதி. நளினி சுரேஷ்
திரு. சுரேஷ்
குழந்தை. ஜோவிட்டா
செல்வி. ரோன்செல் டெட்டோலா

2 திரு. லூக்காஸ்
செல்வி. லிதியாள் அன்புக்கனி
திருமதி. அமித்தி ராபின்
திருமதி. கோகிலா

3 திருமதி. விஜி டைட்டஸ்
செல்வி. ஜெயலீதி
திருமதி. பியுலா பொற்கொடி சரவணன்

4 செல்வன். சாம் ஜெர்ரிக்
திரு. ஜேக்கப் நிக்ஸன்
திருமதி. ஜெயராணி கெத்சியாள் சைமன்
செல்வி. கோல்டு நான்சி பிலோசினா

5 திருமதி. கிருபா மனோகரன்
திருமதி. ரேவதி சகா

6 திருமதி. அமுதா அப்பாதுரை
திருமதி. ரூபி அன்னபூரணி தேவராஜ்
திருமதி. பெனிட்டா ஷெரின்
திரு. எபினேசர் இம்மானுவேல்
திருமதி. சரஸ்வதி (எ) சுவாதிகா
குழந்தை. மிராக்ளின் லிடியா

7 திரு. தாமஸ் ஆல்வின் பிரபு
திருமதி. உஷா சௌந்தர்ராஜன்
திருமதி. பியுலா ராஜன்

8 திரு. பாஸ்கர் கோயில்பிள்ளை
திருமதி. நிஷாந்தினி மேத்யூஸ்
திரு. விக்டர் அன்புராஜ்
திரு. சாம் தாமஸ்
திருமதி. பெர்ஸிஸ் சராபெல்
செல்வன். ஜேக்கப் ஜோயல்

9 திருமதி. ஜாய்ஸ் மேரி ஃபிரான்சிஸ்
செல்வன். சீமோன் ராஜா அற்புதராஜ்

10 திரு. ஃபிராங்க்ளின் பிரேம்குமார்
திரு. ரத்னகுமார் பாஸ்கர்
திரு. ஸ்டீஃபன் பால்துரை
குழந்தை. ஜோயல் சாம்

12 திருமதி. ஸ்டெல்லா மேஷாக்
திரு. அந்தோனி ஜேக்கப் ராஜா

13 திரு. யுவராஜ்

14 அருள்திரு. அப்பாத்துரை
செல்வி. ஷைனி ஆக்னஸ்
திரு. சதீஷ்குமார்
திருமதி. வனஜா சுந்தர்
திரு. ஆண்ட்ரூ மூர்த்தி

15 எலிஜா மிராக்ளின்
திருமதி. ஏஞ்சல் பாலினா ஸ்பர்ஜன்

16 திருமதி. ஜான்சி ஜாகர்
திருமதி. ஆனி சாலமோன்

17 திரு. K. சந்திரசேகரன்
திரு. M. பிரான்சிஸ்
திருமதி. மனோகரி சர்ச்சில்
செல்வி. ஏஞ்சலின் பிரின்ஸி
செல்வன். விஜய்ஸன் சுகிர்தராஜ்

18 திரு. ஜெயக்குமார்
திருமதி. ஷைனி மோனிஷா ஷெல்டன்

20 திருமதி. கல்யாணி
செல்வி. பிளெஸ்ஸி அனுகிரகா
செல்வன். ஜெரிக் நத்தானியேல்
திருமதி. காயத்ரி ஜாய்ஸ் ஷர்மா
திருமதி. லின்ஸி ஜெனோ ஆலிவர்
செல்வன். ஸ்டீஃபன் விக்னேஷ்ராஜ்

21 திரு. பிரதீப்குமார்
செல்வன். ஈத்தன் ஜெரேமியா

22 திருமதி. சூசைமணி
திரு. ஸ்டீஃபன்
திருமதி. ஜாய்ஸ்லின் தேவகுமார்
திரு. ஜேசன்
செல்வன். ஆஃப்லின் சாமுவேல்

26 திரு. அபிஷேக் கிறிஸ்டோஃபர்

27 திரு. கிறிஸ்டோஃபர்
செல்வன். ஹெட்ரிக்ஸன்

28 திரு. கிறிஸ்துதாஸ்

29 திரு. ஜெபாஸ்டின்
செல்வி. கேரல் டேவிட்

30 திரு. செலஸ்டின் ஜோஸ் டேனியல்
திருமதி. ப்ரீத்தம் சாலமோன்
செல்வன். சாம் ஜோவன் சிங்



## ஜுன் – 2026 : தங்கள் திருமண நாள் காணுவோர் :

"எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்." – யோபு 5:9

03 திரு. ஜெபராஜ் – திருமதி. எஸ்தர் தம்பதியினர்
திரு. ஜான் ஜெபதுரை – திருமதி. ஜென்சி தம்பதியினர்

06 திரு. மோசஸ் எபினேசர் – திருமதி. ஆனி ரூபி பிரியா தம்பதியினர்
திரு. ராஜேஷ்குமார் – திருமதி. அபிதா தம்பதியினர்
திரு. பிரேம்சந்த் – திருமதி. சிஜீ ஆன்லின் தம்பதியினர்

07 திரு. கருணாகரன் – திருமதி. பரிமளா காந்தி தம்பதியினர்

08 திரு. ஜேம்ஸ் பிரேம்குமார் – திருமதி. குளோரி ஜெயா தம்பதியினர்

09 திரு. செலஸ்டின் ஜோஸ் டேனியல் – திருமதி. சுவேதா தம்பதியினர்
திரு. தீபக் ஜோனத்தான் – திருமதி. ஜெமிமா ஹாப்டே தம்பதியினர்
திரு. மேத்யூ – திருமதி. ரூசன்னாள் ஜெனிபர் தம்பதியினர்

10 திரு. பிரான்சிஸ் – திருமதி. அம்மச்சி செல்வகுமாரி தம்பதியினர்
திரு. ஜெயகுமார் – திருமதி. ஷீலா தேவமலர் தம்பதியினர்
அருள்திரு. அப்பாத்துரை – திருமதி. அமுதா தம்பதியினர்

11 திரு. சாமுவேல் சௌந்தர்ராஜன் – திருமதி. கெத்சிமா ஹேமலதா தம்பதியினர்

12 திரு. கிறிஸ்டோபர் ராஜசேகரன் – திருமதி. பெர்ஸிஸ் தம்பதியினர்
திரு. இன்பராஜ் – திருமதி. ஜெயசீலி தம்பதியினர்

15 திரு. சாலோம் டேவிட் – திருமதி. ரூத் தம்பதியினர்

16 திரு. சார்லஸ் – திருமதி. ஏஞ்சல் ஜாஸ்மின் தம்பதியினர்

17 திரு. சார்லஸ் – திருமதி. ரூபி தம்பதியினர்

24 திரு. ஃபிராங்க்ளின் பிரேம்குமார் – திருமதி. டீனா ரெபேக்கா தம்பதியினர்
திரு. ஜவர்தாஸ் – திருமதி. கிளாடிஸ் தம்பதியினர்

27 திரு. வேதநாயகம் – திருமதி. எமீமாள் தம்பதியினர்

30 திரு. ஜேசுதாஸன் – திருமதி. விமலா தம்பதியினர்



## கிளை சபைகள் : ஜுன் – 2026

### தங்கள் பிறந்த நாள் காணுவோர் :

*வடமேல்பாக்கம்*
07.06. ஷெரின் ஷாலோம்
14.06. பேபி. செலீனா
29.06. செல்வி. கீர்த்தனா

*பனையூர்*
01.06. திருமதி. பவித்ரா
08.06. குழந்தை. நான்சி
15.06. குழந்தை. ஜெருஷா
16.06. குழந்தை. யுவினா
17.06. குழந்தை. திவ்யஸ்ரீ
25.06. திருமதி. ரேவதி

*பேரீஞ்சம்பாக்கம்*
03.06. முத்து
05.06. இரவிக்குமார்
08.06. ரெபேக்காள் (லட்சுமி)
அலெக்ஸ்
09.06. பிரகாஷ்
தினகரன்
13.06. கெத்சியாள் ( நந்தினி)
14.06. செல்வராஜ்
15.06. சந்தியா
16.06. அபிதா

*சென்னாகுப்பம்*
10.06. திருமதி. ரேவதி எட்வர்ட் காலின்ஸ்
13.06. திரு. ஜேபஸ் எட்வர்ட் காலின்ஸ்
திரு. யோகேஷ் ராஜ்
17.06. திரு. தமிழ்வாணன் டேவிட்
15.06. திருமதி. எப்ஸிபா தாமஸ்
16.06. செல்வி. அந்தோனி அம்மாள்

*சாலமங்கலம்*
01.06. செல்வி. ஜெனிஃபர் வீரசேகர்
02.06. திரு. யோவான்
03.06. திரு. நோவா
திரு. ஜெபாஸ்
திருமதி. மீகாள்
14.06. திரு. கிதியோன்



### தங்கள் திருமண நாள் காணுவோர் :

*பனையூர்*
10.06. திரு. கார்த்திகேயன்
திருமதி. ரேவதி தம்பதியினர்
12.06. திரு. ஏழுமலை
திருமதி. சுமதி தம்பதியினர்
22.06. திரு. வின்சென்ட்
திருமதி. ஜாய்சி தம்பதியினர்

*பேரீஞ்சம்பாக்கம்*
09.06. திரு. மனோவா
திருமதி. எலிசபெத் தம்பதியினர்

*சாலமங்கலம்*
03.06. திரு. பால் வேலாயுதம்
திருமதி. சந்திரா
27.06. திரு. யோவான்
திருமதி. ஷீபா





## ஜுன் மாத வேத வினா பகுதி

**2 நாளாகமம் 31 –36**

1. கர்த்தருக்கு முன் நன்மையும் செம்மையும் உண்மையுமுள்ளவன் யார் ?
2. யார் கீதவாத்தியங்களை வாசிக்க அறிந்தவர்கள் ?
3. தன் ஆஸ்தியிலிருந்து எடுத்து ஒரு பங்கைக் கொடுத்தவன் யார் ? எதற்காக ?
4. தேவனுடைய ஆலயத்தில் சிலையை ஸ்தாபித்தவன் யார் ?
5. ராஜாவுக்கு முன்பாக ஆசாரியன் இல்க்கியா வாசித்த புத்தகம் எது ?
6. சகலத்திலும் தசமபாகத்தைப் பரிபூரணமாகக் கொடுத்தவர்கள் யார் ?
7. எரேமியா யார் மீது புலம்பல் பாடினான் ?
8. யார்மேல் கர்த்தருடைய உக்கிரம் மூண்டு சகாயமில்லாமல் போயிற்று ?
9. தேவன் யாருக்கு மகா திரளான ஆஸ்தியைக் கொடுத்தார் ?
10. நெருக்கப்படுகையில் கர்த்தரை நோக்கி தன்னைத் தாழ்த்தினவன் யார்?

## வேத வினா : சரியாகப் பொருத்துக.

(2 நாளாகமம் 31-36)

1. எசேக்கியா X எகிப்தின் ராஜா
2. கோரேலேவியன் X நியாயப்பிரமாண புத்தகத்தை கண்டு எடுத்தான்
3. கர்த்தருடைய X நம்பிக்கை வைத்தார்கள்
4. மீகாவின் குமாரன் X தூர்த்துப்போட்டார்கள்
5. வார்த்தையின்மேல் X விளம்பரம் பண்ணினார்கள்
6. ஆமோன் X மனமேட்டிமையானான்
7. இல்க்கியா X உற்சாக காணிக்கையின்மேல் அதிகாரி
8. ஓடைகளையும் ஊற்றுகளையும் X அப்தோன்
9. நேகோ X உக்கிரம் பெரியது
10. பெர்சியா ராஜா கோரேஸ் X மேன்மேலும் அக்கிரமம் செய்தான்

திருமதி ராய் டேவிட்

**விடைகளை ஜுன் 25-ம் தேதிக்குள் அனுப்பவும்**

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி :
**CSI** *கிறிஸ்து நாதர் ஆலயம்*
6/371, ஞானம்மாள் ரோடு, டேவிட் நகர், படப்பை – 601 301.

## மே மாத வேத வினாப் போட்டி – சரியான விடைகள் :

| | | |
|---|---|---|
| 1. | 2 நாளாகமம்.... 23 : 15 | யோய்தா நூற்றுமுப்பது வயதில் மரணமடைந்தான் |
| 2. | 2 நாளாகமம்.... 31 : 10 | அம்பாரம் |
| 3. | 2 நாளாகமம்.... 22 : 2,3 | தாய் அத்தாலியாள், மகன் அசரியா |
| 4. | 2 நாளாகமம்.... 27 : 3,4 | யோய்தா |
| 5. | 2 நாளாகமம்.... 22 : 11 | யோவாஸ் அகசியாவின் குமாரன் |
| 6. | 2 நாளாகமம்.... 24 : 20, 22 | யோய்தாவின் குமாரன் சகரியா கூறினது |
| 7. | 2 நாளாகமம்.... 31 : 2,3 | எசேக்கியா ராஜா கொடுத்தான் |
| 8. | 2 நாளாகமம்.... 31 : 20 | |
| 9. | 2 நாளாகமம்.... 28 : 3 | ஆகாஸ் தன் குமாரரை அக்கினியில் தகனித்தவன் |
| 10. | 2 நாளாகமம்.... 30 : 11-13 | எருசலேமில் மகா பெரிய சபையாக கூடினார்கள் |

**பெண்களுக்கான வேதவினாப் போட்டி**

**மே மாதம் சரியான விடைகள் அனுப்பியவர்களை வாழ்த்துகிறோம்.**

திருமதி. எமிலி லில்லி ஜாய்ஸ்

திருமதி. ஆலிவ் எபன்

திருமதி. செல்வகுமாரி

திருமதி. அமுதா அப்பாதுரை

திருமதி. ஸ்வீனா பிரவின்

திருமதி. கீதா கௌதமி

திருமதி. மல்லிகா ஸ்பான்ஸி

திருமதி. ஜெமிமா ஹாப்டே

திருமதி. ஹாரியட் அற்புதா

திருமதி. பொன்மதி தர்மராஜ்

திருமதி. ஷைலா ரெபேக்கா

திருமதி. ஸ்டெல்லா மேஷாக்

திருமதி. பிரேமா கிறிஸ்டோபர்

திருமதி. ஜெயராணி விக்டர்

திருமதி. மஞ்சு ஆன்ந்தகுமார்

திருமதி. கமலா ஜெரேமியா

திருமதி. ஜாய் கென்னடி

திருமதி. பெரில் பாஸ்கர்

திருமதி. டாரதி ஸ்டீபன்

திருமதி. கிருபாவதி

திருமதி. நிருபா சார்லஸ்

திருமதி. ஜான்சி

திருமதி. புனிதவதி பால் பாண்டியன்

திருமதி. ஏஞ்சல் மேஷாக்

திருமதி. ஜாய்ஸ் ராஜா சாமுவேல்

திருமதி. எஸ்தர் சுந்தர்

திருமதி. அபிகாயல் மனோரஞ்சிதம்

திருமதி. கமலா இம்மானுவேல்

திருமதி. பானுமதி

திருமதி. ரத்னா அம்புரோஸ்

திருமதி. பெனிட்டா டேனிஷ்



"பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள்". யோவேல் 1:4

## ஜூன் மாத உபவாசக் கூடுகை

**13.06.2026 சனிக்கிழமை**

காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை

இடம்: **CSI கிறிஸ்து நாதர் ஆலயம்**





**தலைமை :**

**Rev. Y. *தேவகுமார்***

**இறைச் செய்தி :**

**Rev. *சாமுவேல் அன்பரசு***

**CSI** வண்டலூர் அலகு

(இணை இயக்குநர் பேராய சமூக கரிசனை வாரியம்)

**சாட்சிகள், பாடல்கள், ஜெபவேளை**

*அனைவரும் பங்கேற்று இறையாசி பெற அன்புடன் அழைக்கிறோம்.*

*மதிய உணவு வழங்கப்படும்.*






**ஆண்கள் ஐக்கிய சங்கம், படப்பை**

**ஜூன் மாதம்**

**திருமறை ஆய்வு – Bible Study**

"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்." சங். 1:2

**பிரதி புதன்கிழமை மாலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை ஆண்கள் ஐக்கிய சங்கத் திருமறை ஆய்வு நடைபெறும்.**

மூன்றாம் வாரம் 17.06.2026 – **Rev. Y. தேவகுமார்**

நான்காம் வாரம் 24.06.2026 – திரு. **லூக் ஜெயராஜன்**

ஆயர்

**9840198476**

திரு. பெனடிக்ட் ஆபிரகாம்

கன்வீனர்

**9443011345**

CSI கிறிஸ்துநாதர் ஆலயம் – படப்பை குருசேகரம்

# குடும்ப ஜெபக்கூடுகை நடைபெறும் இல்லங்கள்

**நாள்: பிரதி வியாழன்** **நேரம் : மாலை 7.00 மணி**

## ஜுன் 2026

**18**

*திரு. ராஜேந்திரன்*
*திருமதி. பூங்கொடி*
விவேகானந்தன் நகர்
2வது தெரு, படப்பை
செல். 9941812991

<u>தொடர்புக்கு</u>

ஆயர்
98401 98476


திரு. டேனிஷ் பிரபாகர், கன்வீனர்
98418 51476

## <u>கிராம ஊழியம்</u>

**28.06.2026 நான்காம் ஞாயிற்றுக்கிழமை** மாலை 4.00 மணிக்கு **நற்செய்திப் பணித்தளத்தில்** ஊழியம் நடைபெறும். இதில் பங்குபெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.



**ஆண்களுக்கான குறுக்கு எழுத்துப்போட்டி**
**ஜுன் மாதம் – 2026**
2 தீமோத்தேயு முழுவதும்




இடமிருந்து வலம்

1. தீமோத்தேயுவில் உள்ள .................விசுவாசத்தை பவுல் நினைவு கூறுகிறார்.
4. யார் பவுலின் விலங்கைக் குறித்து வெட்கப்படவில்லை ?
5. ஊழியக்காரன் எதை சகிக்கிரவனாயிருக்க வேண்டும் ?
6. வேத வாக்கியங்கள் யாரால் அருளப்பட்டிருக்கிறது ?
7. பவுலை விட்டு பிரிந்து கிறஸ்கே எந்த நாட்டிற்கு போய்விட்டான் ?
9. எந்த பட்டணத்திலுள்ள தோற்சுருளை எடுத்து வரும்படி பவுல் சொல்கிறார் ?

மேலிருந்து கீழ

2. பவுல் புறஜாதியாருக்கு யாராக நியமிக்கப்பட்டார் ?
3. எந்த நாட்டில் உள்ளவர்கள் பவுளை விட்டு விலகினார்கள் ?
8. பவுலை விட்டு பிரிந்து தல்மாத்தியா நாட்டிற்கு போது யார் ?
10. ஒனேசிப்போறு எங்கு வந்த போது பவுலை தேடி கண்டுபிடித்தான் ?


**விடைகளை ஜுன் 25–ம் தேதிக்குள் அனுப்பவும்.**

## ஆண்களுக்கான குறுக்கெழுத்துப் போட்டி

*ஏப்ரல் மாதம் சரியான விடைகள் அனுப்பியவர்களை வாழ்த்துகிறோம்.*

| | |
|---|---|
| திரு. பஞ்சம் | திரு. டேவிட் ராஜ்குமார் |
| திரு. ராஜ்குமார் | திரு. மேஷாக் |
| திரு. அனிஷ்குமார் | திரு. ஐசக் டேனியல் |
| திரு. சுரேஷ் ராஜா | திரு. சாம் மோசஸ் |
| திரு. சாலமன் | திரு. ஆனந்தகுமார் |
| திரு. பிரான்சிஸ் | திரு. செல்வின் ஜெயகரன் |
| திரு. டியூக் இம்மானுவேல் | திரு. ஸ்டான்லி ராஜ்குமார் |
| திரு. சாமுவேல் | திரு. பால்ராஜ் |
| திரு. வின்செண்ட் ஜெயராஜ் | திரு. டேனிஷ் பிரபாகர் |

## மே மாதம் ஆண்களுக்கான குறுக்கு எழுத்துப் போட்டிக்கான விடைகள்






## மே மாத வண்ணம் தீட்டுதல் போட்டியில் பங்கேற்ற பிள்ளைகள் :

| | | |
|---|---|---|
| அபிஷா | – | 7ம் வகுப்பு |
| ஃபீபி ஜொவானா | – | **L.K.G** |
| ஜெரிக் நத்தானியேல் | – | **U.K.G** |
| ஈனோக் மேத்யூஸ் | – | **Pre-KG** |
| எலிஜா மிராகிளின் | – | 3ம் வகுப்பு |
| மர்லியா பிளெஸ்ஸி | – | 3ம் வகுப்பு |
| சைன் ஐசக் | – | 2 3/4 வயது |
| அன்புராஜன் | – | 4ம் வகுப்பு |
| பிளஸ்வின் | – | 5ம் வகுப்பு |
| ஈத்தன் ஜெரேமியா | – | 5ம் வகுப்பு |
| ஜெர்ஷோன் | – | 3ம் வகுப்பு |
| ஆதவன் | – | 1ம் வகுப்பு |

## மூத்தோர் பகுதி

கர்த்தரின் பெரிதான நாமத்தினாலே மூத்தோர் ஒவ்வொருவருக்கும் என் அன்பான வாழ்த்துக்களையும் ஸ்தோத்திரத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். கர்த்தர் முதியோர்களைப் பயன்படுத்துவதின் நோக்கம் அவர்களிடமுள்ள அனுபவமும் ஞானமும் ஆகும். அவர்களின் அனுபவம் இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாக அமைகிறது. இவ்வாறாக தேவனால் பயன்படுத்தப்பட்டவர்தான் நோவா. அவர் ஆதாமின் பத்தாவது தலைமுறை லாமேக்கின் மகன். அவருக்கு சேம், காம், யாபேத் என்று மூன்று குமாரர்கள் இருந்தார்கள். தனது காலத்து ஜனங்களுக்குள் நோவா நீதிமானாகவும் தன் தலைமுறையில் குற்றமற்றவராகவும் இருந்தார். பேழை கட்டுவதற்கான தேவன் மூலம் தொழில்நுட்ப ஞானமும் கடின உழைப்பும் அவருக்கு இருந்தது. மேலும் அவர் எப்போதும் தேவனோடு